**கவனிக்க.-** *2010.04.09 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1650 - 2010 අප්‍රේල් 16 වැනි සිකුරාදා - 2010.04.16

*1650 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 758 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 766 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, ஏப்பிறல் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பதவிகள் - வெற்றிடம்

### கல்கமுவ பிரதேச சபை

2009.11.27 ஆந் திகதியும் 1630 ஆம் இலக்கமும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வெற்றிடமாக உள்ள பதவிகளுக்காக ஆட்சேர்ப்பது சம்பந்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகள் சம்பந்தமாக அந்த நிபந்தனைகள் தொடர்ந்தும் செல்லுபடியாவதுடன் விண்ணப்பம் அனுப்பப்படவேண்டிய கால எல்லையை 2010.05.07 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. மேலும் வடமேல் மாகாண அரச சேவையின் கல்கமுவ பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாக உள்ள கீழ்காணும் பதவிக்கு சேர்த்துக் கொள்வதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உள்ள, கல்கமுவ பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

| இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்கள் | சம்பள திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1. | சுகாதார ஊழியர் | 01 | 6/2006 (IV) PL 1 – 2006 A - ரூபா 11,730- 10 ×130 – 10 x 1,145- 12 × 160 - ரூபா 17,600 | க. பொ. த. (சா/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது இரண்டு பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும் (விருப்பத்துக்குரிய பாடங்கள் தவிர்ந்த) |

3. **பதவிக்கான ஏனைய தகைமைகள்** .- (i) கல்கமுவ பிரதேச சபை அதிகார எல்லைக்குள் மூன்று வருடங்களுக்கு குறையாத காலம் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்ப முடிவுத்திகதிக்கு வயது 18 வருடங்களுக்கு குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது சேவையில் இருப்பவர்களுக்கு இந்த வயதெல்லை செல்லுபடியாகாது.)

(iii) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(iv) நல்லொழுக்கமும், நல்ல தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(v) ஏதும் ஒரு குற்றவியல் நீதிமன்றில் குற்றவாளியாகக் காணப்பட்டு தண்டனை பெறாதவராக இருத்தல் வேண்டியதுடன், அரச அல்லது உள்ளூராட்சி/மாகாண அரச சேவையிலிருந்து பதவி நீக்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

4. **அடிப்படைக் கல்வித்தகைமைகள்**.-

1.1 க. பொ. த. (சா/த) சாதாரண சித்திக்கு 03 புள்ளிகள்
1.2 க. பொ. த. (சா/த) திறமை சித்திக்கு 04 புள்ளிகள்
1.3 க. பொ. த. (சா/த) அதி திறமை சித்திக்கு 05 புள்ளிகள்

| | | |
|---|---|---|
| (1) | க. பொ. த. த. ப. (உ/த) பரீட்சையில் ஆகக்கூடியது 02 பாடங்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும். ஆகக்கூடிய புள்ளிகள் | 30 |
| (2) | பொது அறிவு, பொது விவேகத்துக்காக கேள்விகளில் தெரிவு செய்து கேட்கப்படும் 05 கேள்விகளுக்கு வழங்கப்படும் பதில்களுக்கு ஆகக்கூடிய புள்ளிகள் | 50 |
| (3) | ஆளுமைக்கான புள்ளிகள் | 20 |
| | மொத்த புள்ளிகள் | 100 |

5. **சேர்த்துக்கொள்ளும் முறையும், விண்ணப்பிக்கும் முறையும்**.-

(1) சேவையின் தேவையைப் பொறுத்து உரிய முறையினாலான நேர்முகப் பரீட்சை மூலம் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

(2) தற்போது கல்கமுவ பிரதேச சபையில் நிரந்தர, அமய, சமயாசமய, ஒப்பந்த அடிப்படையில் சேவையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(3) இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்படுகின்ற மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பப்படிவத்தை 2010.05.07 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கும் படியாக "செயலாளர், பிரதேச சபை, கல்கமுவ" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(4) விண்ணப்ப கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

(5) விண்ணப்பப் படிவத்துடன் கீழ்காணும் அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(அ) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;
(ஆ) கல்வி அத்தாட்சிப்பத்திரங்கள் ;
(இ) வசிப்பிடத்தை உறுதிப்படுத்தும் பிரதேச செயலாளரின் அத்தாட்சிப்பத்திரம் ;
(ஈ) அண்மையில் பெற்றுக்கொண்ட நன்நடத்தை அத்தாட்சிப்பத்திரங்கள், இரண்டு ;
(உ) தொழில் அனுபவம் பற்றிய அத்தாட்சிப்பத்திரங்கள்.

(6) இந்த விண்ணப்பம் கோரப்பட்டதன் பின்னர் அல்லது அதற்கு இடைப்பட்ட அல்லது சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவதை தாமதப்படுத்துவது. இந்த அறிவித்தலை இரத்துச் செய்வது போன்ற சகல விடயங்களினதும் அதிகாரம் கல்கமுவ பிரதேச சபையின் செயலாளருக்கே உரித்தாகும்.

(7) அடிப்படை தகுதிகளைப்பூர்த்தி செய்திருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் உரிய காலத்தில் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

ஜே. எம். நிமல் ஜயசிங்ஹ,
செயலாளர்,
கல்கமுவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கல்கமுவ,
2010.03.25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்கமுவ பிரதேச சபை**

............................................................................ பதவி

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   (ஆ) முழுப் பெயர் :----.
2. முகவரி :----.
3. பிறந்த திகதி :-
   வருடம் :----, மாதம் :----, திகதி :----.
4. விண்ணப்ப முடிவுத்திகதிக்கான வயது :-
   வருடங்கள் :----, மாதம் :----, நாட்கள் :----.
5. ஆணா/பெண்ணா? :----.
6. விவாகமானவரா/இல்லையா ? :----.
7. தேசிய இனம் :----.
8. கல்வித்தகைமைகள் :----.
9. நீர் இலங்கைப் பிரசையாயின் பிறப்பினாலா ? /பதிவின் மூலமா ? :----.
10. தொழில் சார் தகைமைகள்/அனுபவம் :----.
    (i)
    (ii)
    (iii)
11. நீர் ஏற்கெனவே இந்த சேவை செய்பவராயின் சேவைக்காலமும், விபரமும் (நிரந்தர/தற்காலிக/அமய/இணைக்கப்பட்ட/கொடுப்பனவு அடிப்படையிலா என்ற விபரம்.) :----.

மேற்கண்ட விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானதும், சரியானதும், என்று உறுதிப்படுத்துகின்றேன். இங்கு குறிப்பிட்டுள்ள தகவல்கள் பிழையானவை என நான் இந்த பதவிக்கு தெரிவு செய்யப்பட முன்னர் தெரிய வந்தால் நான் தகுதியற்றவன் என கருதப்படுவதுடன் நியமனம் கிடைக்கப்பட்ட பின்னர் தெரியவந்தால் எதுவித நஷ்டஈடும் இன்றி என்னை சேவையிலிருந்து நீக்குவதற்கு முடியும் என்பதை நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

***ஆ. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :***
(தற்போது சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)

விண்ணப்பதாரர் மேலே குறிப்பிட்டு உள்ள விபரங்கள் உண்மை என்றும், தெரிவு செய்யப்பட்டால் இச்சேவையில் இருந்து விடுவிக்க முடியும் என்றும், தற்போது ................ பதவியில் சேவையில் உள்ளார் என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவர்

திகதி :

4-370

---

**தங்காலை நகர சபை**

தென் மாகாண அரச சேவையில் பதவி வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு

தங்காலை நகர சபையில் வெற்றிடமாக உள்ள கீழ்வரும் அட்டவணையில் குறிக்கப்பட்டிருக்கும் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புக்காக குறைந்தபட்ச தகுதிகளுள்ள தென்மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பிடத்தைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தற்போது தங்காலை நகர சபையில் தற்காலிக, பதிலீடு, ஒப்பந்த முறை, சலுகை அடிப்படையில் சேவை செய்வோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**அட்டவணை**

| பதவி | பதவி எண்ணிக்கை | சம்பள விகிதம் (மாதாந்தம்) | கல்வித் தகைமை |
|---|---|---|---|
| 01. அலுவலக தொழிலாளி | 01 | ரூபா 11,730 - 10 × 120 – 10 ×130 – 10 X 145- 12 × 160 - ரூபா 17,600 | கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி பெற்ற பாடசாலையில் தரம் 05 (ஆண்டு 06) சித்திபெற்றிருத்தல் |
| 02. சுகாதாரத் தொழிலாளி | 05 | ரூபா 11,730 - 10 × 120 – 10 ×130 – 10 X 145- 12 × 160 - ரூபா 17,600 | கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி பெற்ற பாடசாலையில் தரம் 05 (ஆண்டு 06) சித்திபெற்றிருத்தல் |
| 03. பாதைத் தொழிலாளி | 06 | ரூபா 11,730 - 10 × 120 – 10 ×130 – 10 X 145- 12 × 160 - ரூபா 17,600 | கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி பெற்ற பாடசாலையில் தரம் 05 (ஆண்டு 06) சித்திபெற்றிருத்தல் |

**தேவையான தகுதியும் பொது நிபந்தனைகளும்.-**

1. அரச சேவையில் அல்லது அரச கூட்டுத்தாபன சேவையிலிருந்து ஒழுங்கற்றதன் மீது கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்ட, அரச சேவையில் சேர்க்கப்படாமல் மனிதாபிமான மாற்று வழி மூலம் ஓய்வு கொடுக்கப்பட்ட, ஒழுக்கலாற்று நடவடிக்கை மூலம் பதவி குறைக்கப்பட்ட, சேவையிலிருந்து பதவி விட்டு விலகியவர்களுக்கு இது பொருந்தாது.

2. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு எதிராக செய்யப்பட்ட பாரதூரமான குற்றத்துக்கு நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்டவருக்கும் இது பொருந்தாது.

3. ஏதாவது குற்றவியல் சட்டத்தின் போது நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளியாக்கப்பட்டவர் அல்லது அரச குற்றவியல் வழக்கு பற்றிய தொகுதியில் 449 ஆம் பிரிவில் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டவருக்கும் இது பொருந்தாது.

4. வங்கலோற்று நிலையில் உள்ளவருக்கும் இது பொருந்தாது. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாகவும் இருத்தல் வேண்டும்.

5. நன்னடத்தையும் சரீர சுகமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

6. 2010.05.10 ஆந் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும்.
(தற்போது அரச சேவையில் அல்லது உள்ளூராட்சி சேவையிலுள்ளவர்கட்கு வயதெல்லைக்கான இவ்விதி பொருந்தாது.)

7. விண்ணப்பம் ஏற்கப்படும் திகதிக்கு முற்பட்ட 3 வருட காலம் தொடர்ச்சியாக தென்மாகாணத்தில் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

8. இந்த விண்ணப்பம் கோரப்படும் காலத்தில் அல்லது அதற்குப் பின்னரும் இடைநிறுத்துவதற்கும் விலக்குவதற்கும் தங்காலை நகர சபைக்கு அதிகாரமுண்டு.

**விசேட தகுதி :**

1. விண்ணப்பம் ஏற்கப்படும் திகதிக்கு முற்பட்ட 03 வருட காலத்தில் தங்காலை நகர சபை அதிகார பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல்.

2. பாதைத் தொழிலாளி பதவிக்காக முச்சக்கரவண்டி அல்லது கனரக வாகன அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல், மின்சார தொழில்நுட்பம் மற்றும் இயந்திர இயக்க சம்பந்தமான அறிவு பெற்றிருத்தல், கொத்தனார் தச்சன் வேலைக்கான திறமையும் அனுபவமும் பெற்றிருத்தல் விசேட தகுதியாகக் கொள்ளப்படும். இவ்விசேட தகுதி உடையோருக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

**ஆட்சேர்ப்பு முறை**.- விண்ணப்பதாரர் நேர்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகுதி பரிசோதிக்கப்பட்ட பின்னர் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

**ஆட்சேர்ப்பு நிபந்தனை**.- 1. இப்பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதிய தகுதி உடையவை. விதவை/தபுதாரர் அனாதை ஓய்வூதிய திட்டத்திற்கு உரிய பணம் அறவிடப்படும்.

2. அரச கொள்கைக்கு அமைய தென் மாகாண அரசாங்க கமிசன் சபை, தென் மாகாண சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் சட்டதிட்டங்களுக்கும் நிறுவன நிதி சுற்றுநிரூபம் மற்றும் அரச நிர்வாக சுற்றறிக்கை ஆலோசனை திணைக்கள சட்டவிதிகள் அவற்றுக்கு உரியதிருத்தங்கள் மேலும் தங்காலை நகர சபையினால் நடடுறைப்படுத்தப்படும் கட்டளைகளுக்கும் ஏற்ப செயற்படுவதற்கும் உட்பட்டவராவர்.

3. அரச அதிகாரிகளின் பிணைச் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப பிணை வைக்கப்படல் வேண்டும்.

4. அரச கொள்கைக்கு ஏற்ப மொழித்தேர்ச்சி பெறப்படல் வேண்டும்.

5. ஆட்சேர்ப்பு விதிகளுக்கு அமைய பொய்யான தகவல் கொடுக்கப்பட்டிருப்பது நிரூபிக்கப்படின் நியமனம் ரத்து செய்யப்படும்.

6. ஆட்சேர்க்கப்படும் ஊழியர் இடமாற்றத்துக்கும் உட்பட்டவராவர்.

7. நியமனம் 03 வருட கால நன்னடத்தைக் காலத்தைக் கொண்டது. நன்னடத்தைக் காலத்தில் வேலை, வரவு, நடத்தை திருப்தியற்றதாயின் சேவையிலிருந்து நீக்கப்படுவர்.

**விண்ணப்பிக்க வேண்டிய முறை**.- இவ்வறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் 2010.05.10 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய முறையில், 'தலைவர், தங்காலை நகர சபை, தங்காலை' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அவ்வாறின்றேல் தங்காலை நகர சபை செயலாளரிடம் நேரடியாக கையளிக்கப்பட்டு, ஒப்படைக்கப்பட்டமைக்கான சான்றிதழைப் பெற வேண்டும். விண்ணப்பம் உள்ளடக்கப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ...................... பதவிக்கான விண்ணப்பம் என்று குறிக்கப்படல் வேண்டும்.

தற்போது அரச/உள்ளூராட்சி சேவையில் உள்ளோரின் விண்ணப்பம் உரிய சேவைத் தலைவரின் மூலம் அனுப்பப்படுவதோடு குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணபப்பத்திரத்துடன் கீழ்வரும் ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் அனுப்பப்படல் வேண்டும் :-

(1) பிறப்புச் சாட்சிப்பத்திரம் ;
(2) கல்வி அத்தாட்சிப்பத்திரம் ;
(3) வதிவிடத்தை நிரூபிக்கும் அத்தாட்சிப்பத்திரம் ;
(4) அண்மையில் பெறப்பட்ட கிராம அதிகாரி அத்தாட்சிப்பத்திரம் ;
(5) அண்மையில் பெறப்பட்ட நன்னடத்தை அத்தாட்சிப்பத்திரம் 02 ;

(6) வேறு தகுதி அல்லது அனுபவம் சம்பந்தமான அத்தாட்சிப்பத்திரம் ;
(7) விசேட தகுதி சம்பந்தமான அத்தாட்சிப்பத்திரம்.

அனில் செல்லா ஹென்னதி,
தலைவர்,
தங்காலை நகர சபை,
தங்காலை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தங்காலை பிரதேச சபை**

தென் மாகாண அரச சேவைப் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2010
............................................ பதவி

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   (ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :----.
2. நிரந்தர வசிப்பிட மாவட்டம் :----.
3. நிரந்தர வசிப்பிட பிரதேச செயலாளர் பிரிவு :----.
4. நிரந்தர முகவரி :----.
5. ஆண்/பெண் :----.
6. திருமணமானவர்/திருமணமாகாதவர் :----.
7. பிறந்த திகதி :----.
   2010.05.10 ஆந் திகதிக்கு வயது :-
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
8. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.
9. இலங்கைப் பிரசையாயின் பிறப்பின் மூலம்/பதிவின் மூலம் :----.
10. கல்வித் தகைமை :----.
11. தொழில் தகைமை :----.
12. வேறு தகைமை :----.
13. விசேட தகைமை :----.
14. சேவை அனுபவம் :----.
    (i) தற்போது சேவையாற்றும் நிறுவனம்
    (ii) தற்போது வகிக்கும் பதவி
    (iii) இப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி
    (iv) இதற்கு முன்னர் சேவை செய்த இடமும் வகித்த பதவியும்

இங்கு குறிக்கப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் உரிய விதத்தில் உண்மை என தெரிவிக்கின்றேன். இவ்வாள் சேர்ப்பு சம்பந்தமான நிபந்தனைகளுக்கு ஏற்ப என்னால் உண்மையான விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன எனவும் என்னைத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் கொடுக்கப்பட்ட விபரங்கள் பிழையானவை என அறியப்பட்டால் நான் சேவையிலிருந்து நீக்கப்படவுள்ளேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**தற்போது அரச/உள்ளூராட்சி அரச சேவையில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகளுக்கான நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இவ்விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி.......................................................... என்பவர் இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் ............................................ ஆக சேவை செய்கின்றார். அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்./முடியாது. அவர் எவ்விதமான ஒழுக்காற்றுக் குற்றத்துக்கும் (எச்சரிக்கை செய்தல் அல்லாத) ஆளாகவில்லை என்றும் உறுதிப்படுத்துவதோடு, இவ்விண்ணப்ப படிவத்தை உறுதிப்படுத்தியும்/உறுதிப்படுத்தாமலும் முன்வைக்கின்றேன்.

----,
திணைக்கள/நிறுவனத் தலைவர்
அல்லது அதிகாரமளிக்கப்பட்ட
அதிகாரியின் கையொப்பம்

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
நிறுவனம் :----.
திகதி :----.

4-374

**தங்காலை நகர சபை**

தென் மாகாண அரச சேவையில் பதவி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு

தங்காலை நகர சபையில் வெற்றிடமாக உள்ள கீழ்வரும் அட்டவணையில் குறிக்கப்பட்டிருக்கும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக தகுதியுள்ள, தென்மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்போரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| பதவி | பதவி எண்ணிக்கை | சம்பள விகிதம் (மாதாந்தம்) | கல்வித் தகைமை |
|---|---|---|---|
| 01. தீயணைப்புப்படையினர் | 04 | ரூபா 14,280 - 145 × 7 – 180 × 27(ரூபா 1-2006ஏ) இந்த சம்பள விகிதத்தில் மூன்றாவது மட்ட அளவுக்கு முன்னர் தடைகாண் தகுதியில் சித்திபெற வேண்டும். பயிற்சிக் காலத்தில் ரூபா 3,000 மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படும். | க. பொ. த. அல்லது தே. க. பொ. (என். சீ. ஜீ. ஈ.) தரம் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழுடன் கணிதம், விஞ்ஞானம் உட்பட 06 பாடங்களில் இரண்டு முறைகளுக்கு உட்பட்ட விதத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இதில் ஒரே முறையில் 05 பாடங்களாவது சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |

**தேவையான மற்றும் தகுதியும் நிபந்தனைகளும்**.-

1. அரச சேவையில் அல்லது அரச கூட்டுத்தாபன சேவையிலிருந்து ஒழுங்கற்றதன் மீது கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்ட, அரச சேவையில் சேர்க்கப்படாமல் மனிதாபிமான மாற்று வழி மூலம் ஓய்வு கொடுக்கப்பட்ட, ஒழுக்கலாற்று நடவடிக்கை மூலம் பதவி குறைக்கப்பட்ட, சேவையிலிருந்து/பதவி விட்டு விலகியவர்களுக்கு இது பொருந்தாது.

2. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கு எதிராக செய்யப்பட்ட பாரதூரமான குற்றத்துக்கு நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்டவருக்கும் இது பொருந்தாது.

3. ஏதாவது குற்றவியல் சட்டத்தின்போது நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளியாக்கப்பட்டவர் அல்லது அரச குற்றவியல் வழக்கு பற்றிய தொகுதியில் 449 ஆம் பிரிவில் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டவருக்கும் இது பொருந்தாது.

4. வங்கலோற்று நிலையில் உள்ளவருக்கும் இது பொருந்தாது.

5. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

6. நன்னடத்தையும் சரீர சுகமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

7. 2010.05.10 ஆந் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும் 25 வயதுக்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும்.
(தற்போது தீயணைப்புப் படையில் உள்ளவர்கள் அவர்களின் முதல் நியமன தினத்தின்போது அதிகபட்ச வயது எல்லையை அடையாதிருப்பின் அதிக பட்ச வயது எல்லை நிபந்தனைகளிலிருந்து விடுவிக்கப்படுவர். அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள ஊழியர்களுக்கு இந்த உயர் பட்ச வயது எல்லை பொருந்தாது.)

8. விண்ணப்பம் ஏற்கப்படும் திகதிக்கு முற்பட்ட 3 வருட காலம் தொடர்ச்சியாக தென்மாகாணத்தில் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

9. விண்ணப்பதாரர் 5 அடி 4 அங்குல குறைந்த பட்ச உயரம் உடையவராக இருத்தல் வேண்டும்.

10. விண்ணப்பதாரரின் பாரம் குறைந்தபட்சம் 125 இறாத்தல் (56.8 கிலோ கிராம்) உடையதாக இருத்தல் வேண்டும்.

11. விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும்.

12. அரச பரிபாலன சுற்றுநிரூபம் இலக்கம் 44/90 இன் கீழ் ஓய்வு பெற்றவராக இருக்கக்கூடாது.

13. இந்த விண்ணப்பம் கோரப்படும் அல்லது அதற்குப் பின்னரும் இடைநிறுத்துவதற்கும் விலக்குவதற்கும் தங்காலை நகர சபைக்கு அதிகாரமுண்டு.

**விசேட தகுதி**

1. விண்ணப்பதாரர் தங்காலை நகர சபை அதிகார பிரதேசத்தில் 03 வருடங்கள் நிரந்தரமாக வசித்தல் விசேட தகுதியாகக் கருதப்படும்.

2. விண்ணப்பதாரர் தீயணைப்பு சம்பந்தமான தொழிற்பயிற்சி பெற்றிருத்தல் விசேட தகுதியாகக் கருதப்படுவதோடு, அது அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் பெற்றிருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பதாரர் சீவியம் பாதுகாத்தல் சம்பந்தமான பாடநெறியை மேற்கொண்டவராக இருத்தல் விசேட தகுதியாகக் கருதப்படும். (இது ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தினால் பெற்றிருத்தல் வேண்டும்.)

4. தற்போது உள்ளூராட்சி நிறுவனத்தில் தீயணைப்பு அதிகாரியாக வேலை செய்தல்.

5. கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல்.

6. கணனி சம்பந்தமான பயிற்சி பெற்றிருத்தல்.

இவ்விசேட தகுதியை சம்பூரணப்படுத்திய விண்ணப்பதாரருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**ஆட்சேர்ப்பு முறை**

1. இலக்கம் 15/90 அரச பரிபாலன சுற்றுநிருபத்துக்கு அமைய எழுத்துப் பரீட்சையும் எழுத்துப் பரீட்சையின் திறமை ஒழுங்கு முறைப்படி தொழில் உடற் பரீட்சைக்கு விண்ணப்பதாரர் உட்படுத்தப்பட்டு, அதில் சித்தி பெறும் விண்ணப்பதாரர் எழுத்துப் பரீட்சை முறைப்படி சேர்த்துக்கொள்ளப்படுவர்.

2. ஆட்சேர்ப்பு எழுத்துப் பரீட்சை .-
   (அ) புத்தியும் பொது அறிவும் பரீட்சித்தல்
   வினாப்பத்திரம் 01 மணித்தியாலத்தைக் கொண்டது.
   (ஆ) இப்பரீட்சையில் சித்தி பெறும் விண்ணப்பதாரர் இந்த தொழில் தொடர்பான பரீட்சைக்கு தென் மாகாண அரசாங்க கமிஷன் சபையினால் தொழில் உடற் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

3. எழுத்துப்பரீட்சையின் பின்னர் தகுதி பெறுவோர் நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**சேவையில் இணைப்பதற்கான நிபந்தனை**

1. இப்பதவிகள் நிரந்தரமானது. ஓய்வூதியத்தைக் கொண்டது. விதவை/தபுதாரர், அனாதை ஓய்வூதிய திட்டத்திற்கு உரிய பணம் அறவிடப்படும்.

2. நியமனத் தினத்திலிருந்து 02 வருடங்கள் பயிற்சிக் காலம் உட்பட 03 வருடங்கள் நன்னடத்தைக் காலமாகும். மேலும் காலம் நீட்டப்படுவது நன்னடத்தைக் காலமாக கருதப்படும். நன்னடத்தைக் கால இறுதியில் நிரந்தர நியமனக் கடிதம் கிடைக்கும் வரை நன்னடத்தைக் காலமாகவே கொள்ளப்படும்.

3. அரச கொள்கைக்கு அமைய தென் மாகாண அரசாங்க கமிசன் சபை, தென் மாகாண சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் சட்டதிட்டங்களுக்கும் நிறுவனப் பண சுற்றுநிருபம் மற்றும் அரச சுற்றறிக்கை ஆலோசனை திணைக்கள சட்டவிதிகள் அவற்றுக்கு உரிய திருத்தங்கள் மேலும் தங்காலை நகர சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் கட்டளைகளுக்கும் ஏற்ப செயல்படுவதற்கும் உட்பட்டவராவர்.

4. அரச அதிகாரிகளின் பிணைச்சட்டதிட்டங்களுக்கு ஏற்ப பிணை வைக்கப்பட வேண்டும்.

5. அரச கொள்கைக்கு ஏற்ப மொழித்தேர்ச்சி பெறப்படல் வேண்டும்.

6. ஆட்சேர்ப்பு விதிகளுக்கு அமைய பொய்யான தகவல் கொடுக்கப்பட்டிருப்பது நிரூபிக்கப்படின் நியமனம் ரத்து செய்யப்படும்.

7. ஆட்சேர்க்கப்படும் ஊழியர் இடமாற்றத்துக்கும் உட்பட்டவராவர்.

8. மேற்படி நியமனம் தற்போது உள்ளூராட்சி பரிபாலனத்துக்கு உரியதாகும்.

**வேறு நிபந்தனை.-**

1. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரருக்கு பயிற்சி முடிவில் பின்னர் திருமணம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

2. பயிற்சியின் போது வரவு, நடத்தை, வேலைகள் திருப்தியற்றதாயின், தொழில்முறையில் சேவை மட்டம் பெறப்படாவிடின் பயிற்சியாளரை பயிற்சியிலிருந்து நீக்குவதற்கு அதிகாரம் பெற்றவரால் முடியும்.

3. பயிற்சிக் காலத்தில் மாதாந்தம் ரூபா 3,000 கொடுப்பனவு வழங்கப்படும். (தற்போது தற்காலிக, பதிலீடு, ஒப்பந்த முறையில் சேவை செய்யும் அதிகாரிகளுக்கு இக்கொடுப்பனவு உரியதல்ல)

4. பயிற்சியை வெற்றிகரமாக முடித்த அதிகாரிகளினால் பயிற்சியை முடித்ததுடன் 05 வருடங்கள் தென் மாகாண அரச சேவையில் சேவையாற்றுவதற்கான ரூபா 10,000 பெறுமதி கொண்ட பிணைப் பத்திரம் கையொப்பம் இடப்படல் வேண்டும்.

5. தீயணைப்பு படையினராக நியமனம் பெறின் உரிய உள்ளூராட்சி அதிகார பிரதேசத்தில் வசிப்பது கட்டாயமாகும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முறை**.- இவ்வறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் 2010.05.10 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய முறையில், 'தலைவர், தங்காலை நகர சபை, தங்காலை' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அவ்வாறின்றேல் தங்காலை நகர சபை செயலாளரிடம் நேரடியாக கையளிக்கப்பட்டு, ஒப்படைக்கப்பட்டமைக்கான சான்றிதழைப் பெற வேண்டும். விண்ணப்பம் உள்ளடக்கப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ....................... பதவிக்கான விண்ணப்பம் என்று குறிக்கப்படல் வேண்டும்.

தற்போது அரச/உள்ளூராட்சி சேவையில் உள்ளோரின் விண்ணப்பம் உரிய சேவைத் தலைவரின் மூலம் அனுப்பப்படுவதோடு குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப் பத்திரத்துடன் கீழ்வரும் ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் அனுப்பப்படல் வேண்டும் :-

(1) பிறப்புச் சாட்சிப்பத்திரம் ;
(2) கல்வி அத்தாட்சிப்பத்திரம் ;
(3) வதிவிடத்தை நிரூபிக்கும் அத்தாட்சிப்பத்திரம் ;
(4) அண்மையில் பெறப்பட்ட கிராம அதிகாரி அத்தாட்சிப்பத்திரம் ;
(5) அண்மையில் பெறப்பட்ட நன்னடத்தை அத்தாட்சிப்பத்திரம் 02 ;
(6) வேறு தகுதி அல்லது அனுபவம் சம்பந்தமான அத்தாட்சிப்பத்திரம் ;
(7) விசேட தகுதி சம்பந்தமான அத்தாட்சிப்பத்திரம்.

அனில் செல்லா ஹென்னதி,
தலைவர்,
தங்காலை நகர சபை,
தங்காலை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தங்காலை நகர சபை**

*தென் மாகாண அரச சேவைப் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2010*
............................................... பதவி

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :----.
2. நிரந்தர வசிப்பிட மாவட்டம் :----.
3. நிரந்தர வசிப்பிட பிரதேச செயலாளர் பிரிவு :----.
4. நிரந்தர முகவரி :----.
5. ஆண்/பெண் :----.
6. திருமணமானவர்/திருமணமாகாதவர் :----.
7. பிறந்த திகதி :-
2010.05.10 ஆந் திகதிக்கு வயது :-
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
8. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.
9. விண்ணப்பதாரரின் பாரம் :-----, உயரம் :-----.
10. இலங்கைப் பிரசையாயின் பிறப்பின் மூலம்/பதிவின் மூலம் :----.
11. கல்வித் தகைமை :----.
12. வேறு தகைமை :----.
13. தொழில் தகைமை :----.

14. விசேட தகைமை :----.

15. சேவை அனுபவம் :----.

(i) தற்போது சேவையாற்றும் நிறுவனம்
(ii) தற்போது வகிக்கும் பதவி
(iii) அப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி
(iv) இதற்கு முன்னர் சேவை செய்த இடமும் வகித்த பதவியும்

இங்கு குறிக்கப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் உரிய விதத்தில் உண்மை என தெரிவிக்கின்றேன். இவ்வாள் சேர்ப்பு சம்பந்தமான நிபந்தனைகளுக்கு ஏற்ப என்னால் உண்மையான விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன எனவும் என்னைத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் கொடுக்கப்பட்ட விபரங்கள் பிழையானவை என அறியப்பட்டால் நான் சேவையிலிருந்து நீக்கப்படவுள்ளேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**தற்போது அரச/உள்ளூராட்சி அரச சேவையில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகளுக்கான நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இவ்விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி............................................................ என்பவர் இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் ............................................. ஆக சேவை செய்கின்றார். அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்./முடியாது. அவர் எவ்விதமான ஒழுக்காற்றுக் குற்றத்துக்கும் (எச்சரிக்கை செய்தல் அல்லாத) ஆளாகவில்லை என்றும் உறுதிப்படுத்துவதோடு, இவ்விண்ணப்ப படிவத்தை உறுதிப்படுத்தியும்/உறுதிப்படுத்தாமலும் முன்வைக்கின்றேன்.

----,
திணைக்கள/நிறுவனத் தலைவர்
அல்லது அதிகாரமளிக்கப்பட்ட
அதிகாரியின் கையொப்பம்

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
நிறுவனம் :----.
திகதி :----.

4-375

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## குண்டசாலை பிரதேச சபை மெணிக்ஹின்ன

*மாட்டிறைச்சி கசாப்பு அவசரச் சட்டம் (272 ஆம் அதிகாரம்)*

மேற்படி கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர் அவரின் பெயரின் முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மாடு/ஆடு இறைச்சி மடுவம் நடாத்துவதற்காக 2010 ஆம் வருடத்திற்கு அனுமதி கோரி இருக்கிறார். அதற்கமைய அவருக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு குண்டசாலை பிரதேச சபை நிர்வாக பிரதேசத்திற்குள் வதியும் எவரினதும் எதிர்ப்பு இருந்தால் எதிர்ப்புக்கான காரணங்களை இருபிரதிகளுடன் கூடிய கடிதத்தின் மூலம் இவ்வறிவித்தல், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் எதிர்ப்பு தெரிவிக்கும்படி, மாட்டிறைச்சி கசாப்பு அவசர சட்ட (272 ஆம் அதிகாரம்) இரண்டாவது பந்தியின்படி இத்தால் தெரிவிக்கிறேன்.

அசேல ஏக்கநாயக்க,
தலைவர்,
குண்டசாலை பிரதேச சபை.

குண்டசாலை பிரதேச சபை அலுவலகம்,
மெனிக்ஹின்ன,
2010.03.25.

| விண்ணப்பதாரியின் பெயர்/முகவரி | இடம் | விலாசம் |
|---|---|---|
| எஸ். எம். மிசார், இல. 35, திகன, ரஜவெல்ல | திகன, கலகெயாஹேனவத்த ஆடு/மாட்டிறைச்சி மடுவம் | கலகெடியாஹேனவத்த திகன, ரஜவெல்ல |

4-367

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

*1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களரிகளுக்கு உரிமமளித்தல் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தம்*

*இதன் கீழ் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர், இடத்தில் அவரின் பெயருக்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள களரியை 2010 ஆம் ஆண்டில் வைத்திருப்பதற்கு மேற்படி உரிமமளித்தல் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.*

*அத்தகைய உரிமம் அக்களரிக்கு வழங்கப்படுவதற்கு ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும், சொல்லப்பட்ட களரிக்கென உத்தேசிக்கப்பட்டிருக்கும் வளவுக்கு அண்மையில் வதியும் எந்த ஆளும் தனது ஆட்சேபனைக்கான ஏதுக்கள் பற்றிய எழுத்துமூலமான கூற்றொன்றினை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்படும் திகதியிலிருந்து நான்கு வாரங்களுக்குள் இரு பிரதிகளில் எனக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டுப்படுகின்றீர்கள்.*

*சி. வே. குலநாயகம்,*
*செயலாளர்.*

*வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை அலுவலகம்,*
*கரவெட்டி,*
*2010, மாச்சு 16.*

**அட்டவணை**

| விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் | களரியின் தலைவரா, செயலாளரா அல்லது முகாமையாளரா என்பது | களரியின் பெயர் | களரி அதனது செயற்பாடுகளை நடாத்த உத்தேசித் திருக்கின்ற மனைத்தலம் |
|---|---|---|---|
| ஐயாத்துரை விக்னேஸ்வரன் ஐங்கரபதி, தேவரையாளி, நெல்லியடி வடக்கு, கரவெட்டி. | முகாமையாளர் | ஐங்கரன் பொழுதுபோக்குக் கழகம் | பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி |

*4-368*

---

## மாகோ பிரதேச சபை

*1892 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊன் அறுக்கும் கட்டளைச் சட்டத்தின் (272 ஆம் அத்தியாயம்) 7 (2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*மாகோ பிரதேச செயலகப் பிரிவின் தாம்பரே கிராம உத்தியோகத்தர் பிரிவின் நந்தெனிகம கிராமத்தில் பிரதான குடியிருப்பாளர் இலக்கம் 337 இல் வதிந்துள்ள திரு. ஏ. சீ. எம். பசீர் என்பவரினால் மேற்குறிப்பிட்ட இடத்தில் மாட்டிறைச்சிக் கடையொன்றையும் கொலைக்களமொன்றையும் நடாத்திச் செல்லும் பொருட்டு அனுமதிப்பத்திரமொன்றுக்காக விண்ணப்பித்துள்ளாரெனவும், இந்த அனுமதிப் பத்திரத்தை வழங்குவது தொடர்பில் மாகோ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் குடியிருக்கும் எவருக்கும் எதிர்ப்பேதேனும் இருப்பின், அதனை விரிவாக கடிதமொன்றின் மூலம் இரு பிரதிகளில் தயாரித்து, இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் எனக்குக் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமெனவும் ஊன் அறுக்கும் கட்டளைச் சட்டத்தின் 7 (2) ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறியத்தருகின்றேன்.*

*எஸ். எம். பந்துல புஸ்பகுமார,*
*தலைவர்,*
*மாகோ பிரதேச சபை.*

*மாகோ பிரதேச சபை அலுவலகம்,*
*2010, பங்குனி, 24.*

*4-373*

**தும்பனைப் பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின்கீழ் விடுவிக்கப்படுகின்ற அறிவித்தல்*

*மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்டத்தின் தும்பனே பிரதேச சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள கீழ்தரப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வீதிகள் இப்பிரதேச சபைக்கு சொந்தமான வீதிகளாகப் பகிரங்கப்படுத்தப்பட வேண்டுமென 2009.10.30 ஆந் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்ட பிரேரணைகளுக்கேற்ப இவ்வீதிகள் இப்பிரதேச சபைக்குரிய வீதிகளாக பகிரங்கப்படுத்தப்படுகிறது.*

*கே. ஜீ. உபாலி குமாரசிங்ஹ,*
*தலைவர்,*
*தும்பனைப் பிரதேச சபை.*

*தும்பனைப் பிரதேச சபை அலுவலகம்,*
*கலகெதர,*
*2010.03.21.*

*4-433/1*

---

**தும்பனைப் பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின்கீழ் விடுவிக்கப்படுகின்ற அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்டத்தில் தும்பனே பிரதேச சபை மூலம் கீழ்தரப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வீதிகள் தும்பனே பிரதேச சபைக்கு சொந்தமான வீதிகளென இத்தால் அறியத்தருகிறேன்.*

*இவ்வீதி தொடர்பாக உரிய காணியின் உரிமையாளர்கள் எதிர்ப்புகள் தெரிவிப்பதாயின் இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் தங்களது உரிமையை உறுதிப்படுத்துவதற்காக 1987 ஆம் 24 ii ஆவது பிரிவின் பிரகாரம் செயற்படுமாறு வேண்டப்படுகிறது.*

*கே. ஜீ. உபாலி குமாரசிங்ஹ,*
*தலைவர்,*
*தும்பனைப் பிரதேச சபை.*

*தும்பனைப் பிரதேச சபை அலுவலகம்,*
*கலகெதர,*
*2010, மாச்சு 21 ஆந் திகதி.*

**அட்டவணை**

| இலக்கம் | வீதியின் பெயர் | நீளம் | அகலம் |
|---|---|---|---|
| 1 | கந்தன்ஹேன அஞ்சலகத்தின் அருகிலிருந்து ஆரம்பித்து சியம்பளாவத்த வயல் ஊடாக அலவத்தேகம வரையிலான பாதை | 2560 அடி | 12 அடி |

***இடதுபக்க காணி உரிமையாளர்கள் விபரம் :***

1. திரு. கே. ஜீ. பிரேமதாச ஜயமங்கள
2. திருமதி கே. ஜீ. வயலட் ரணசிங்ஹ
3. திரு. கே. ஜீ. லீலாரத்ன
4. திரு. கே. ஜீ. பர்ட்டி ரணசிங்ஹ
5. திரு. ஏ. ஜீ. நிமல் நந்தசேன
6. திரு. ஏ. ஜீ. லலித் நவரத்ன
7. திரு. கே. ஏ. ஜீ குணரத்ன

***வலது பக்க காணி உரிமையாளர்கள் விபரம் :***

1. திரு. கே. ஜீ. விஜேரத்ன
2. திரு. கே. எம். முனசிங்ஹ
3. திரு. ஜேமிஸ் கமகே
4. திரு. கே. ஜீ. மைனிக் ரணசிங்ஹ
5. திருமதி கே. எம். புஞ்சிவதி
6. திரு. ஜீ. ஜீ. சிரியோல்
7. திரு. ஏ. ஜீ. நிமல் ரணசிங்ஹ
8. திருமதி ஏ. ஜீ. சுஞ்சிவதி
9. திரு. கே. ஏ. குணசிங்ஹ

**அட்டவணை**

| இலக்கம் | பாதையின் பெயர் | நீளம் | அகலம் |
|---|---|---|---|
| 1 | நியங்கொட ஊரை ஊடறுத்துச் செல்லும் ஜய மாவத்தையின் வெரல்லகமகெதர ஊடாக நியங்கொட சலுசல வரை செல்லும் சிறிய பாதை | 250 மீ. | 10 அடி |

***வலது பக்க காணி உரிமையாளர்களது விபரம் :***

1. திரு. டீ. பி. பலிபான
2. திருமதி அனுலா விக்ரமசிங்ஹ
3. திரு. ஹீன்பண்டா ரத்நாயக்க
4. திரு. ஆர். எம். ரத்நாயக்க
5. திரு. ஆர். எம். செனவிரத்ன
6. திருமதி அனுலா விக்ரமசிங்ஹ
7. திரு. ஜகத் சமரக்கோன்
8. திரு. புந்தல சமரக்கோன்
9. திரு. எம். எம். டிக்கிரிபண்டா
10. திரு. எஸ். எம். டிக்கரி பண்டா
11. திரு. எஸ். எம். டிக்கிரி பண்டா
12. திரு. எஸ். எம். டிக்கிரி பண்டா
13. திரு. எஸ். எம். டிக்கிரி பண்டா
14. திரு. எஸ். எம். டிக்கிரி பண்டா

***இடதுபக்க காணி உரிமையாளர்களது விபரம் :***

1. திரு. டீ. பி. பலிபான
2. திருமதி அனுலா விக்ரமசிங்ஹ
3. திரு. ஹீன் பண்டா ரத்நாயக்க
4. திரு. சிரில்
5. திரு. திலக் ரத்நாயக்க
6. திரு. திலக் ரத்நாயக்க
7. திரு. திஸ்ஸ ரத்நாயக்க
8. திரு. கே. டி. ரத்நாயக்க
9. திரு. சமிந்த பண்டார

**அட்டவணை**

| இலக்கம் | வீதியின் பெயர் | நீளம் | அகலம் |
|---|---|---|---|
| 1 | வெலிவிட்ட சாங்கீகாராம விகாரை அருகிலிருந்து தொடங்கி வயல் ஊடாக வெலிவிட்ட பஹலகம ஏ. டப்ளியூ. ஆர். திலகரத்ன, திருமதி ஏ. என். ஆர். மானெல் குமாரி திலகரத்ன ஆகியோரது காணியினூடாக சங்கராஜபுர கனிஷ்ட வித்தியாலயம் வரையுள்ள பாதை | 4600 அடி | 10 அடி |

***இடதுபக்க காணி உரிமையாளர்களது விபரம் :***

1. சாங்கீகாராம விகாரை காணி
2. பத்தினியம்மன் ஆலயத்துக்குரிய வயல் காணி (தற்போது வை. எம். குணரத்ன பண்டா வேலை செய்யும்)
3. சாங்கீகாராம விகாரையின் வயல்
4. திருமதி கமலா திசாநாயக்க
5. திரு. டப்ளியூ. ஜீ. ஆரியரத்ன
6. திரு. டப்ளியூ. ஜீ. அபேரத்ன
7. திரு. ஜே. எம். குணரத்ன பண்டா
8. திரு. ஈ. எம். உபாலி ஏக்கநாயக்க
9. திரு. ஈ. எம். உபாலி ஏக்கநாயக்க
10. திரு. ஜே. எம். திசாநாயக்க
11. திரு. டப்ளியூ. ஜீ. ரணசிங்ஹ
12. திரு. டப்ளியூ. ஜீ. விஜேரத்ன

***வலதுபக்க காணி உரிமையாளர்களது விபரம் :***

1. சாங்கீகாராம விகாரை
2. பத்தினியம்மன் ஆலயத்துக்குரிய வயல் காணி
3. ஏ. எம். டி. பண்டா வயற்காணி
4. திரு. ஏ. என். ஆர். திலக்கரத்ன
5. திருமதி ஏ. டப்ளியூ. ஆர். மானெல் குமாரி திலக்கரத்ன
6. திரு. டப்ளியூ. ஜீ. ஆரியரத்ன
7. திரு. டப்ளியூ. ஜீ. அபேரத்ன
8. திரு. ஜே. எம். குணரத்ன பண்டா
9. திரு. ஜே. எம். குணரத்ன பண்டா
10. திரு. ஜே. எம். சென‌விரத்ன பண்டா
11. திரு. ஜே. எம். திசாநாயக்க
12. திரு. டப்ளியூ. ஜீ. விஜேரத்ன
13. திரு. ஆர். பீ. வெலிவிட்ட

**அட்டவணை**

| இலக்கம் | வீதியின் பெயர் | நீளம் | அகலம் |
|---|---|---|---|
| 1 | பள்ளேகெதர பீ. ஜீ. விஜேரத்னவின் காணியிலிருந்து தொடங்கி சில்வத்கெதர வத்த ஊடாக அலோட்டுவ வத்தை வரையுள்ள பாதை | 1018 அடி | 08 அடி |

***வலதுபக்க காணி உரிமையாளர்களது விபரம் :***

1. பி. ஜீ. விரேத்ன
2. ஏ. எம். நந்தாவதி
3. ஜீ. ஜீ. ரத்நாயக்க
4. ஜீ. ஜீ. முத்துபண்டா
5. எஸ். எம். பி. ரத்நாயக்க
6. பொதுக் கிணறு
7. அலோட்டுவத்த கொலனி

***இடதுபக்க காணி உரிமையாளர்களது விபரம் :***

1. டப்ளியூ. எம். கே. விஜேரத்ன
2. ஏ. ஏ. ஜயரத்ன
3. எஸ். ஜீ. செனவிரத்ன
4. எஸ். ஜீ. ரோஹன
5. எஸ். எம். பி. ரத்நாயக்க
6. எஸ். ஜீ. பொடி அப்புஹாமி
7. கொளுவா வயல்
8. பிங் வயல்
9. வாய்க்கால்
10. அலோட்டுவத்த கொலனிப் பாதை

**அட்டவணை**

| இலக்கம் | வீதியின் பெயர் | நீளம் | அகலம் |
|---|---|---|---|
| 1 | கலகெதர - ரம்புக்கன பாதையின் பத்மாகார நிவஸ அருகிலிருந்து தொடங்கி பள்ளேவத்த வயலின் ஊடாக நீதிமன்ற வீதி வரையுள்ள பாதை | 1500 அடி | 05 அடி |

***வலதுபக்க காணி உரிமையாளர்களது விபரம் :***

1. திரு. டப்ளியூ. ஜீ. பொன்சேகா
2. கலகெதரயாய பொது கமத்தை
3. திரு. ஏ. டி. அபேரத்னவின் அந்தகொலி வயல்
4. திருமதி டி. ஜீ. சியாமலி ஹப்புகொட

***இடதுபக்க காணி உரிமையாளர்களது விபரம் :***

1. திரு. டப்ளியூ. ஜே. பொன்சேகா
2. திரு. டப்ளியூ. ஜே. பொன்சேகாவின் வயற்காணி
3. திரு. டி. எம். பொடிபண்டாவின் வயற்காணி
4. திரு. டி. எம். பொடிபண்டாவின் வயற்காணி
5. பள்ளேகெவத்த
6. நீதிமன்ற வீதி

**அட்டவணை**

| இலக்கம் | வீதியின் பெயர் | நீளம் | அகலம் |
|---|---|---|---|
| 1 | பொல்வத்த இஹலகம-கொஸ்ஹின்ன பாதையின் குழாய்க் கிணற்றின் அருகிலிருந்து ஆரம்பித்து எம். ஜீ. விஜேதுங்கவின் காணி ஊடாக வியாகல கொலனி வரையுள்ள பாதை | 3500 அடி | 08 அடி |

***வலதுபக்க காணி உரிமையாளர்களது விபரம் :***

1. திரு. டப்ளியூ. எம். வீரசேகரவினது காணி
2. திரு. எம். ஜீ. விஜேதுங்கவினது காணி
3. திரு. எம். ஜீ. அப்புஹாமியின் காணி
4. வியாகல கொலனி வரையிலான பாதை

***இடதுபக்க காணி உரிமையாளர்களது விபரம் :***

1. மல எல - திரு. கே. டப்ளியூ. ரம்பண்டாவுக்குரிய காணி
2. மல எல - திரு. டி. எம். சரத்குமாரவுக்குரிய காணி
3. மல எல - திரு. கே. டப்ளியூ. விஜேரத்னவுக்குரிய காணி
4. திரு. எம். ஜீ. அப்புஹாமிக்குரிய காணி
5. வியாகல கொலனிப் பாதை

**அட்டவணை**

| இலக்கம் | பாதையின் பெயர் | நீளம் | அகலம் |
|---|---|---|---|
| 1 | பொக்காவலயிலிருந்து அமுஹேன மெரே வரையிலான பாதை | 3500 அடி | |

***இடதுபக்க காணி உரிமையாளர்களது விபரம் :***

1. திரு. எச். எம். காமினி ஹேரத்
2. திரு. டப்ளியூ. அபேசிங்ஹ
3. திரு. ஈ. எம். லொக்குபண்டா
4. திரு. ஈ. எம். சுரவீர
5. திரு. டப்ளியூ. எம். மத்தும பண்டா
6. திரு. டப்ளியூ. எம். ரம்பண்டா
7. திரு. டப்ளியூ. எம். நவரத்ன
8. திருமதி டீ. எம். துயாவதி
9. திரு. டப்ளியூ. எம். மத்தும பண்டா
10. திரு. எஸ். எம். குடாபண்டா
11. திரு. டப்ளியூ. எம். டிக்கிரிபண்டா
12. திரு. ஓ. ஜீ. உபயந்தா

***வலதுபக்க காணி உரிமையாளர்களது விபரம் :***

1. திரு. டப்ளியூ. எம். அசோக்க ஹேரத்
2. திரு. டப்ளியூ. அபேசிங்ஹ
3. திரு. டப்ளியூ. அபேசிங்ஹ
4. திரு. ஓ. ஜீ. பேலிஸ்
5. திரு. ஓ. ஜீ. கிரா
6. திரு. எஸ். எம். ஜீ. அல்விஸ்
7. திருமதி டி. எம். தயாவதி மெனிகே
8. திரு. எஸ். எம். மத்தும பண்டார
9. திரு. எஸ். எம். குடா பண்டா
10. திரு. டப்ளியூ. எம். டிக்கிரி பண்டா
11. திரு. டப்ளியூ. எம். காமினி

**அட்டவணை**

| இலக்கம் | பாதையின் பெயர் | நீளம் | அகலம் |
|---|---|---|---|
| 1 | மில்லகொல்ல பாதையின் மதகு மற்றும் பொல்கொட்டுவ கிணறு அருகிலிருந்து ஆரம்பித்து ஜயலத் எப்பிட்டவத்த என்பவரது காணியினூடாக அளுதெனிய பறகொட பாதையுடன் தொடர்புறும் பாதை | 1300 அடி | 12 அடி |

***இடது மற்றும் வலதுபக்க காணி உரிமையாளர்களது விபரம் :***

1. மில்லகொல்ல பாதையின் மதகு அருகில் பொல்கொட்டுவ கிணற்று அருகில் தொடங்கி அளுதெனிய விகாரையின் இறப்பர்த் தோட்டம்
2. பம்மடித்த பொல்ஹேன காணி
3. கே. பி. உக்குபண்டாவின் காணியினதும் வீட்டினதும் எதிரில்
4. கே. ஜீ. ரம்பண்டாவின் காணி
5. அளுதெனிய விகாரைக்குரிய இறப்பர்தோட்ட பிங்ஹேன
6. டப்ளியூ. ஜீ. புஞ்சிபண்டாவுக்குரிய இறப்பர்க்காணி
7. எச். எம். டிங்கிரி அம்மாவுக்குரிய காணியினதும் வீட்டினதும் எதிரில்
8. திரு. ஆர். எம். ஹீன்பண்டா கிராம அலுவலரது காணி
9. ஈ. ஜீ. ஏக்கநாயக்கவுக்குரிய காணி
10. ஈ. ஜீ. எப்பிட்டவத்த என்பவருடைய காணி

**அட்டவணை**

| இலக்கம் | பாதையின் பெயர் | நீளம் | அகலம் |
|---|---|---|---|
| 1 | தென்னேவத்த புதிய வீடுகளுக்குச் செல்லும் பாதை | 250 அடி | 10 அடி |

***காணி உரிமையாளர்களது விபரம் :***

1. திரு. எஸ். ஆர். பீ. த சில்வா
2. திரு. எம். என். சீ. அபேரத்ன
3. திரு. எஸ். டீ. ஹெட்டியாரச்சி
4. டி. எம். சோமலதா பீரிஸ்
5. திருமதி எச். எம். கே. ரம்யா குமாரி
6. திரு. பீ. பியல் ரவீந்திர குமார
7. திரு. கே. என். பீ. விஜேகோன்
8. எஸ். ஏ. ஜீ. அத்தநாயக்க
9. திரு. யூ. ஜீ. விஜேசூரிய
10. திருமதி எம். ஜீ. நிசாந்தி
11. திருமதி ஜீ. ஜீ. இந்திராணி மெனிக்கே
12. திருமதி எம். ஏ. ஏ. டிலானி

**அட்டவணை**

| இலக்கம் | பாதையின் பெயர் | நீளம் | அகலம் |
|---|---|---|---|
| 1 | தேதுனுபிட்டிய - கந்தஹேன பாதை | 900 அடி | 08 அடி |

***இடதுபக்க காணி உரிமையாளர்களது விபரம் :***

1. திரு. எச். எம். செனவிரத்ன
2. திரு. வி. பி. செனவிரத்ன
3. திரு. எஸ். பி. ஏக்கநாயக்க
4. திரு. சனத் ஏக்கநாயக்க
5. திரு. சரத் சமரதிவாகர
6. திரு. இந்திக்க ராஜபக்ஸ

***வலதுபக்க காணி உரிமையாளர்களது விபரம் :***

1. திரு. எச். எம். செனவிரத்ன
2. திரு. மஞ்சுளா ராஜபக்ஸ
3. திரு. சரத் சமரதிவாகர
4. திரு. இந்திக்க ராஜபக்ஸ

*4-433/2*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.